**சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2013**

சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 30 மில்லியன் வெகுமதி முற்பணத் தொகையில் ரூபா 27.75 மில்லியன் தொகை உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட வெகுமதித் தொகை கணக்கிற்கும் ரூபா 2.25 மில்லியன் தொகை உழைக்கும் போது செலுத்தும் வரிக்கான வரிக் கணக்கிற்கும்'' வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 30 மில்லியனையும் ஒற்றர்களுக்குச் செலுத்திய வெகுமதித் தொகை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 64,157,056 கூட்டுத்தொகையான நிறுத்தி வைத்தல் வரி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி என்பவற்றை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 30,154,929 தொகையான மீள் வைப்புக்கள் வெகுமதி நிதியக் கணக்கின் மீதி வருடக் கணக்காக திரண்ட முன்கொண்டு வரப்படும் மீதியொன்றாக அவதானிக்கப்பட்டதுடன், நீண்டகாலமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. அத்தோடு காலப் பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சிறிய பெறுமதியுடன் கூடிய ரூபா 1,250 முதல் ரூபா 12,500 வரையன வெகுமதி தொகைகள் செலுத்தப்படாமல் இருந்ததால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெகுமதி நிதியத்தில் ரூபா 313,450 தொகையான மீதியொன்று காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 116 மற்றும் 114 ஆம் பிரிவுகள் | (i) | மீளாய்வாண்டின் போது வெகுமதிகள் செலுத்தப்பட்ட 109 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 25,691,862 கூட்டுத்தொகையும் முன்னைய ஆண்டின் போது 234 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 4,823,846 கூட்டுத்தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியும் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |
| | (ii) | உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தும் வெகுமதி தொகைக்காக உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்படும் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைப் பிரகாரம் கொடுப்பனவுகள் சேர்க்கப்பட்டு கணக்கிடப்படாமையால் அதிகளவு வரி வருமானமொன்று அரசிற்கு கிடைக்காமல் போயிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 115,741,700 ஆக இருந்ததுடன், இதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 47,599,048 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 68,142,652 ஆல் அல்லது 143 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டு மற்றும் முன்னைய ஆறு ஆண்டுகளுக்கு உரித்தான நிதியத்தின் வருமானம், செலவினம் மற்றும் தேறிய செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | | | | மொத்த செலவினம் | மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்குக் கொடுப்பனவு | ஒற்றர்களுக்குக் கொடுப்பனவு | வரி உள்நாட்டு இறைவரி திணைக் | ஏனைய செலவினம் | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2007 | 1,171,679,881 | 810,441,327 | 72,757,307 | 105,428,768 | 111,382,303 | 1,100,009,705 | 71,670,176 |
| 2008 | 895,773,758 | 678,463,260 | 55,144,035 | 8,693,891 | 119,792,064 | 862,093,250 | 33,680,508 |
| 2009 | 968,064,233 | 716,618,818 | 84,506,905 | 9,132,859 | 113,226,650 | 923,485,232 | 44,579,001 |
| 2010 | 902,474,770 | 687,504,664 | 37,556,075 | 9,328,789 | 102,357,464 | 836,746,992 | 65,727,779 |
| 2011 | 873,979,003 | 574,047,509 | 106,080,370 | 33,927,845 | 102,229,782 | 816,285,506 | 57,693,497 |
| 2012 | 973,210,594 | 694,361,096 | 128,208,276 | 42,779,776 | 60,262,398 | 925,611,546 | 47,599,048 |
| 2013 | 1,522,699,798 | 1,146,769,044 | 121,281,124 | 64,157,056 | 74,750,874 | 1,406,958,098 | 115,741,700 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சுங்க உத்தியோ கத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு கிடைத்துள்ள வருமானம் ரூபா 549,489,204 ஆல் அதிகரித்திருந்ததுடன் அது 56 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிக் கொடுப்பனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 452,407,948 அல்லது 65 சதவீததால் அதிகரித்திருந்தது.

(இ) சுங்க கட்டளை அதிகாரச்சட்டத்தின் 153(2)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள திணைக்களக் கட்டளை இல. 118 மற்றும் அதன் (அ) முதல் (க) வரையான திருத்தங்கள் மூலம் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதியைப் பகிரும் தீர்மான முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 680 மில்லியன், ரூபா 822 மில்லியன் மற்றும் ரூபா 1268 மில்லியன் என்ற வகையில் மொத்தம் ரூபா 2,770 மில்லியன் தொகை உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 2,415 மில்லியன் அதாவது 87 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெகுமதித் தொகையாக இருந்ததுடன், வழங்கப்படக்கூடிய வெகுமதித் தொகை தொடர்பான ஆகக்கூடிய எல்லையொன்று விதிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் ரூபா 90 மில்லியனை விஞ்சி வெகுமதி செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 12 இறக்குமதி பொருட்கள் தொடர்பாக வகைப்படுத்தல் இலக்கம் பிழையாக காண்பித்த தவறின் கீழ் நியதிச் சட்ட கூட்டுத்தாபனமொன்றுக்கு விதக்கப்பட்டிருந்த ரூபா 208,283,881 தொகையான தண்டப்பணத்தை 2013 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தது. அத்தண்டப்பணத்தில் 30 சதவீதம் அல்லது ரூபா 62,485,164 மாத்திரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 70 சதவீதத் தொகையான ரூபா 145,798,717 சுங்க உத்தியோகத்தர்களுக்கும் சுங்க உத்தியோகத்தர்களின் நலன்புரிக்காக பராமரிக்கப்படும் நிதியத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

1870 சனவரி 01 ஆம் திகதிய 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைகள் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 235 ஆம் அதிகாரத்தில் 163 மற்றும் 164 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட தண்டம் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுத்து இத்தண்டத்தை அகற்றுவதற்கு அல்லது இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கார்நெட் செயற்திட்டத்தின் கீழ் வரிக்கொடுப்பனவின்றி தற்காலிக ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், மீள்ஏற்றுமதி செய்யாமல் இலங்கையில் பதிவு செய்வதற்காக உரிமையாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சுங்க உத்தியோகத்தர்களால் அச்சந்தர்ப்பங்கள் சுங்க புலனாய்வாக கருதப்பட்டு வாகனங்களின் உரித்தை இறக்குமதி செய்யப்பட்ட தரப்பினருக்கே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அங்கு வாகனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட வரிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்ட தண்டப்பணத்தில் 70 சதவீதத்தை உத்தியோகத்தர்களின் வெகுமதி கொடுப்பனவிற்கும் அவர்களின் நலன்புரி நிதியத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) சுங்கத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் எரிபொருள் செலவினத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 26,954,018 கிடைக்கப் பெற்றிருக்கையில் குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் வெகுமதி நிதியத்திலிருந்து ரூபா 41,455,915 தொகை மீளாய்வாண்டில் எரிபொருள் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முறையான அங்கீகாரம் இல்லாமல் அதில் ரூபா 3,848,787 எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் வெகுமதி நிதியத்திலிருந்து ரூபா 14,802,153 தொகை மீளாய்வாண்டின் போது நஞ்சு போதைப்பொருள் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 3,200,000 ஆன செலவினமொன்று மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இச்செலவினம் எதற்காக பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அது முன்னைய ஆண்டின் செலவினத்திற்கு ஒப்பாக ரூபா 1,405,000 ஆல் அல்லது 78 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய PF/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பாதீடு அதற்கு முன்னைய ஆண்டின் செப்தம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டிற்காக 2013 யூன் 21 ஆம் திகதி 09 மாதகால தாமதத்தின் பின்னர் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

(ஆ) 07 செலவின உருப்படிகள் தொடர்பாக பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே 32 சதவீதத்திலிருந்து 1,222 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டதுடன், 3 வருமான உருப்படிகள் தொடர்பாக பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 64 சதவீதத்திலிருந்து 178 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டமையால் பாதீடு சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) பேரேட்டுக் கணக்குகள்
(ஆ) வெகுமதி நிதியத்திற்கு உரிய துணை நிதியங்கள்
(இ) வெகுமதி தொகை பகிர்ந்தளிப்பு
(ஈ) வெகுமதி நிதியத்தின் செலவினங்கள்